**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திரு.S.அமலநாதகமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
**உத்தமபாளையம்.**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 01/2026**
(Original Suit CNR No. TNTH06-000-192-2025)

இளங்கோவன் :: வாதி

**/எதிர்/**

சிலம்பரசன் :: பிரதிவாதி

------

இவ்வழக்கு 03.01.2026-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.04.2026-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.செல்லப்பாண்டி B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்தும், அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிக்கு எதிராக 20.02.2026-ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதி பிராது தொகை ரூ.24,484/-ம், அசல் தொகையான ரூ.20,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை மாதம் 1-க்கு ரூ.100-க்கு ரூ.1.00 வீதம் வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 6% வீதம் பின்வட்டியும் சேர்த்து பிரதிவாதி செலுத்தும்படியும், பிராது செலவு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:52:56 +0530

தொகையினை வாதிக்கு, பிரதிவாதி செலுத்தி வைக்கும்படியும் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்.</u>

2.1) வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்பச்செலவிற்காகவும், இதர செலவுகளுக்காகவும் வேண்டி கடந்த 11.01.2024 ம் தேதியன்று கடனாக ரூ.20,000/– ரொக்கமாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும், அசலும் வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதி கோரும் வேறு நபர்களிடமாவது செலுத்துவதாகக்கூறி ஒப்புக்கொண்டு வாதியின் வீட்டில் வைத்து ஒரு பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தொகை வகையறாக்களை கேட்டு வாதி, பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமும் கேட்டதில் பிரதிவாதி யாதொரு தொகையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே வீண் காலம் கடத்தி வந்துள்ளார்.

2.2) மேலும், வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 22.07.2025 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை 24.07.2025 ம் தேதி பெற்றுக்கொண்ட பிரதிவாதி தொகை எதுவும் செலுத்தி வைக்காமல் இருந்து வந்துள்ளார். எனவே, வாதிக்கு, பிரதிவாதியை பிராது தொகையான ரூ.24,484/–ம், அசல் தொகை ரூ.20,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00/–வீதம் வட்டி செலுத்திவைக்கக்கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

3) இவ்வழக்கில் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், பின்னிட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 20.02.2026 ம் தேதி ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:53:10 +0530

4)இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

| வழக்குரையில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? |
|---|

5) வாதி தரப்பில் வாதி இளங்கோவன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவரது சாட்சியத்தின் போது வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கிற்கு ஆதரவாக சுந்தர்ராஜ் என்பவர் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) <u>பிரச்சனைக்கான விவாதம் மற்றும் தீர்வு :</u>

07–01) வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்பச்செலவிற்காகவும், சில்லறைக் கடன்களைத் தீர்ப்பதற்காகவும், கடந்த 11.01.2024 ம் தேதி கடனாக ரூ.20,000/– பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும் அசலும் வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதி கோரும் வேறு நபர்களிடமாவது செலுத்துவதாகக்கூறி அதற்கு ஆதரவாக வாதி வீட்டில் வைத்து ஒரு பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி பிராமிஸரி நோட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.07.2025 ம் தேதி வாதி அனுப்பிய வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீதினை வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி அனுப்பிய அறிவிப்பினை 24.07.2025 ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான Postal Tracking report கணினி நகல் வா.சா.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

07–02) தாவா தொகை வகையறாக்களை கேட்டு வாதி பிரதிவாதியிடம் பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமும் கேட்டதில் பிரதிவாதி யாதொரு தொகையும் செலுத்திவைக்காமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளார் என்றும், எனவே வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

07–03) இவ்வழக்கில் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தில் இருந்து

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:53:17 +0530

அழைப்பாணை அனுப்பட்டுள்ளது. வாதியின் வழக்குரை விபரங்களை தெரிந்துகொண்ட பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்ய முன்வரவில்லை.

07–04) மேலும், வாதி தானாக முன்வந்து தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். அவர் மூலம் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களின் வாயிலாக பிரதிவாதி, வாதியிடம் அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காக ரூ.20,000/– கடனாக பெற்றுக்கொண்டு அதற்காக வட்டி சேர்த்து அசலுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதிச் சீட்டு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பது அறிய முடிகிறது. மேற்படி புரோநோட்டில் கையொப்பம் செய்த சாட்சி சுந்தர்ராஜ் என்பவரை வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் சாட்சியத்தின் அடிப்படையிலும் பிராது தொகை வகையறாக்களை பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வாதிக்கு உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

07–05) மேற்கண்ட வாதி தரப்பு வழக்குரை சங்கதிகள் யாவும் வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் முதல் விசாரணை பிரமாண வாக்குமூல சங்கதிகளுடன் பொருந்தி அமைந்துள்ளதையும், மேற்படி சங்கதிகள் அனைத்தையும் வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் வாயிலாக வாதி தரப்பானது நிரூபித்துள்ள நிலையில், மேற்படி சங்கதிகளை மறுத்து எதிர்வழக்காட பிரதிவாதிக்கு உரிய வாய்ப்பளித்துள்ள போதிலும், இவ்வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்காடாமலும் இருந்துள்ள செயல் மற்றும் அதனுடன் இணைந்த செயல்தவிர்க்கையானது பிரதிவாதிக்கு எதிராக தீர்மானம் கொள்ளச் செய்கிறது. மேற்படி தீர்மானமானது வாதி தரப்பு மேற்படி வழக்குரை நிரூபணத்திற்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது. அதன்படி வாதி தனது தரப்பு வழக்குரை சங்கதிகளை உரிய சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்திருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானம் கொள்கிறது. மேலும் வாதி, பிரதிவாதியிடம் அசல் தொகையாக ரூ.20,000/–மும் அதற்காக வட்டியாக ரூ.4,484/–யும் சேர்த்து பிராது தொகையாக ரூ.24,484/–யை பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வாதிக்கு உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:53:34 +0530

**08) முடிவாக,**

| | |
|---|---|
| 1 | அசல் வழக்கு எண். 01 /2026 வழக்கு அனுமதிக்கப்படுகிறது.<br><br>பிராது தொகையான ரூ.24,484/-ஐ வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் கடன் தொகை ரூ.20,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 12% சதவீத வருட வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 6% சதவீத வருட வட்டியும் சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்தவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 2 | வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:53:42 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**உத்தமபாளையம்.**

**<u>வாதி தரப்பு சாட்சி.</u>**

வா.சா.1.இளங்கோவன் (வாதி )
வா.சா.2. சுந்தர்ராஜ் (வாதி தரப்பு சாட்சி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்.</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1. | 11.01.2024 | கடனுறுதிச் சீட்டு | அசல் |
| 2. | வா.சா.ஆ.2. | 22.07.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 24.07.2025 | Postal Tracking Report | கணினி நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u> - இல்லை.**

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.27 18:53:49 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**உத்தமபாளையம்.**